
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 7 | ஜனவரி 1994 | இதழ் 1



வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள் 1
2. தலைவனாயிருக்க விருப்பம் 7
3. சபைக்கடுத்த காரியங்களில் பெண்கள் 10
4. எல்லாம் புதிதாயின 12
5. உதவி செய்யுங்கள் - I 14
6. நான் ஏன் பிறந்தேன் 21
7. ஒரு தாலந்து மூலமாக அநேக கனி கொடுத்தல் 27

T H I R U M A R A I   A A S A A N

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 JANUARY 1994 Issue-1

## ஆசிரியவுரை

# நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள்

## ("YOU ARE THE LIGHT OF THE WORLD")

நாம் வாழும் இப்பூபாகத்தில் எத்தனையோ தலைவர்களும், மகான்கள் என்று மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களும் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். மக்களின் இதயத்தில் இடம்பிடிப்பதற்கு தேவையான தகுதிகளுள் ஒன்று சொல் ஆற்றல். ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்களும், மகான்களும் பல சொற்பொழிவுகளை தங்கள் வாழ்நாட்காலத்தில் நிகழ்த்தியிருக்கக் கூடும். அவைகள் தேசபக்தி சம்பந்தப்பட்டதாகவோ, சமுதாய சீர்திருத்தம் பற்றியதாகவோ, பொருளாதார மறுமலர்ச்சிக்கானதாகவோ, ஒரு குறிப்பிட்ட தத்துவத்தை நிலைநாட்டும் முயற்சியாகவோ, ஆன்மீகக் காரியங்களில் அக்கறை காட்டும் பேச்சுக்களாகவோ இருந்திருக்கலாம். அவைகள் எல்லாமே, தாங்கள் வாழ்ந்த காலச் சூழலுக்கு எற்றதாகத்தான் இருந்தனவேயொழிய, எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கக் கூடியதாக இல்லை. ஆனால் நம் ஆண்டவரின், மலைப்பிரசங்கமோ, காலத்தால் கரைந்து போகாமல், இன்றும் இமாலயம் போல் உயர்ந்து நிற்கிறது. இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறவர்கள் கூட, மலைப் பிரசங்கத்தைப் படித்து வியந்து பாராட்டுகின்றனர். அதன் எளிய நடையும் சொல்லாட்சியும், கருத்தாழமும் உண்மையாகப் படிப்போரை பிரமிக்கவே செய்யும்.

மண்ணுயிர்க்காய் தன்னுயிர் ஈந்த இயேசுக் கிறிஸ்து, இப்பூமியில் தான் ஊழியம் செய்த நாட்களில், நன்மைகள் பல செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். அவருடைய வார்த்தைகளில் வல்லமை பொங்கி வழிந்தபடியால், பிசாசுகளைத் துரத்தவும், அநேக அற்புதங்கள் செய்யவும் அவரால் முடிந்தது. அதன் மூலம் அவருடைய கீர்த்தி பக்கத்து பிரதேசங்களுக்கும் வேகமாகப் பரவிற்று. அவருடைய வல்லமையைப் பற்றி கேள்விப்பட்ட ஜனங்கள், அவருடைய போதகத்தைக் கேட்கவும், அவராலே குணம் பெறவும் திரண்டு வந்தனர். (மத் 4:24, 25) பெருங்கூட்டம் முண்டியடித்து அவரை நெருக்கி நின்றபடியால் கூடி வந்தவர்களில் அநேகர் அவர் முகத்தைப் பார்க்கவோ, அவருடைய பேச்சை சரியாகக் கேட்கவோ முடியாத ஒரு நிலை இருந்தது. இதைக் கண்ணுற்ற இயேசுக்கிறிஸ்து, அனைவரும் தன்னுடைய சொற்பொழிவைக் கேட்க விரும்பி மலையின் மீது ஏறி பிரசங்கிக்கத் தொடங்கினார்.

அழியாப் புகழைப் பெற்றுக்கொண்ட இந்த மலை, எந்தப் பகுதியிலிருந்தது என்று நமக்கு தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் நாசரேத்துக்குக் கிழக்கே உள்ள தாபோர் மலைக்கும், திபேரியஸ் மலைக்கும் இடைப்பட்ட பகுதியாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. கலிலேயாக் கடற்கரையிலிருந்து இம்மலைப்பகுதியை எளிதில் காணலாம். கடற் பரப்பிலிருந்து சுமார் 60 அடிகள் உயர்ந்து நின்ற பகுதி. கடற்கரையிலிருந்து சுலபமாக அணுகக் கூடிய இடம்.

அவர் உட்கார்ந்து பிரசங்கிக்கத் தொடங்கினார் என்று வேதத்தில் காண்கிறோம் (5:1,2). உட்கார்ந்து உபதேசிப்பது யூதர்களுக்குள்ளாக இருந்த வழக்கம். அவர் பிரசங்கிக்க உட்கார்ந்தபொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள் என்று காண்கிறோம். இங்கே சீடர்கள் என்பது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 பேர் அல்ல. அவரைச் சுற்றியிருந்த திரளான ஜனங்கள் தான் சீடர்களாகச் சொல்லப்படுகிறார்கள். சீடன் என்றால் கற்றுக் கொள்கிறவன் எனப் பொருள். ஆக இங்கே, இயேசு பிரசங்கிக்கத் தொடங்கி போதகமாகும் பொழுது, கேட்கிற ஜனங்கள் கற்றுக்கொள்கிற சீடர்கள் ஆகிறார்கள். அவ்வளவே.

மலைப்பிரசங்கம் மத்தேயு 5, 6, 7 ஆகிய அதிகாரங்களில் பரவிக் கிடக்கிறது. ஐந்தாம் அதிகாரத்தில் முதல் பன்னிரண்டு வசனங்களை பாக்கிய வசனங்கள் (Beatitudes) என்று வேத அறிஞர்கள் பிரித்துள்ளனர். இப்பகுதியிலுள்ள வசனங்களின்படி வாழ்ந்தால், பாக்கியம் பெற்றவர்களாக, தேவ ஆசீர்வாதம் உள்ளவர்களாக இருக்க முடியும் என்பதே அதன் பொருள். தொடர்ந்து வரும் நான்கு

வசனங்களை (5:13-16) ஆங்கிலத்தில். Similitude என்றழைக்கின்றனர். அதாவது, பாக்கிய வசனங்களுக்கு இணையான, சற்றும் குறையாத ஆசீர்வாதத்தைக் கொடுக்கக் கூடிய பகுதியாகும்.

சரி, நம்முடைய சிந்தனைக்குண்டான பகுதி ஐந்தாம் அதிகாரம் 14ம் வசனத்தின் முற்பகுதி மாத்திரமே. "நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள் என்பதே."

வசனம் 13ல் சீடர்களே, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்..." என்று உப்பைப் பற்றி பேசிவிட்டுத் தான் அடுத்து "ஒளிக்கு" வருகிறார். "பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று யோவான் ஸ்நானகனைப் போல் தானும் பிரசங்கித்துக் கொண்டிருந்த நேரம் அது. வரப்போகும் பரலோக ராஜ்யத்தின் புத்திரர்கள் உப்பைப் போலும், ஒளியைப் போலும் இருக்க வேண்டுமென்று பிரசங்கிக்கிறார். உணவில் உப்பு எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கிறதோ அதைப் போல, ராஜ்யத்தின் புத்திரர்களும் உலகத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென்று விரும்புகிறார். உப்பின் உட்புறக் கிரியையைக் குறித்துப் பேசிவிட்டு, வெளிப்புறக் கிரியையும் அவசியம் என்பதை வலியுறுத்த வருகிறார்.

இயேசுக் கிறிஸ்துவின் அளவில்லாத ஞானத்தை அவருடைய உவமைகள் மற்றும் உதாரணங்களிலிருந்து நாம் கண்டுகொள்ள முடியும். பாமரரும், படிப்பாளிகளும், குடிசை வாசிகளும், அரண்மனைவாசிகளும் புரிந்து கொள்ளும் படியாகவே பேசுவார். உப்பின் குணம் தெரியாமல் இப்பூமியில் ஒருவன் வாழ முடியுமா? அல்லது ஒளியைப் பற்றி அறியாமல் தான் ஒருவன் காலம் தள்ள முடியுமா?

மேலும், அவருடைய அணுகுமுறையும் பரந்த அளவில், விரிவான அடிப்படையிலேயே இருந்தது. 'பூமிக்கு உப்பு' என்றவர் அடுத்து "உலகத்திற்கே ஒளி" என்கிறார். ஏன், உங்கள் குடும்பத்திற்கு ஒளி என்றோ, உங்கள் பகுதிக்கு ஒளி என்றோ, உங்கள் சமுதாயத்திற்கு ஒளி என்றோ, உங்கள் தேசத்திற்கு ஒளி என்றோ கூடச் சொல்லியிருக்கலாம். ஆனால் அவரோ, உலகத்திற்கே ஒளி என்கிறார். அவருடைய போதனைகளை ஏற்றுக் செயல்படும் ஓர் உண்மைச் சீடனின் தாக்கம் உலகளாவிய ஒன்றாக இருக்க வேண்டும் என்றே வலியுறுத்துகிறார். நாம் ஏன் நம்முடைய வெளிச்சத்தை மரக்காலால் மூடிவைத்து, குறுகிய வட்டத்துக்குள் வலம் வந்துகொண்டிருக்க வேண்டும். ஒளியின் வேலை இருளை எதிர்ப்பது மாத்திரமல்ல, அதை விரட்டியடித்து மேற்கொள்கிறது. அதைப்போலவே மெய்யான ஒளியாகிய இயேசுக்கிறிஸ்துவின் சத்தியத்தையும், பரிசுத்தத்தையும் பெற்றிருக்கும் சீடர்கள், கிறிஸ்தவர்கள், உலகத்தில் மண்டி கிடக்கிற

அறியாமையையும், நிறைந்திருக்கிற பாவத்தையும் விரட்டி வெற்றி காணவேண்டும். நீங்களும் நானும் அதற்குத் தயாரா?

சரி சீடர்களை ஒளி என்று சொல்லியிருக்கிறபடியால், ஒளிக்குண்டான சில அடிப்படைப் பண்புகளைப் பார்த்து, அதன் மூலம் நல்மீட்பரின் எதிர்பார்க்குதலை நிறைவேற்றுவோம்.

## 1. ஒளியானது வெளிச்சம் கொடுக்கிறது (Light Illuminates)

தேவன் ஒளியாயிருக்கிறார். (1யோவா 1:5) இதை வெளிப்படுத்தும் அதே யோவான், அவருடைய உபதேசங்களை ஏற்று, கீழ்ப்படிகிற பிள்ளைகளை ஒளியின் பிள்ளைகள் என்று அழைக்கிறார் (யோவா 12:36) அந்த உண்மை பிள்ளைகளைப் பார்த்து தான் இயேசுக்கிறிஸ்து,"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று சொல்கிறார். அப்படியானால், நாம் உலகத்திற்கு வெளிச்சம் கொடுக்கிறோமா? நம்முடைய நீதியான வாழ்க்கை உலகத்து மக்கள் பார்க்கும்படியாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறதா? உலகமானது இருளின் அதிபதியாகிய பிசாசின் காலடியில் விழுந்து அவனுக்கு பாதபூஜை செய்து கொண்டுள்ளது. கிறிஸ்தவமும் பாரம்பரியத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ஆவிக்குரிய ஒழுங்கீனத்தில் மூழ்கி, ஆவிக்குரிய அழிவை நோக்கி அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறது. இவர்களையெல்லாம் மெய்யான ஒளியாகிய தேவனிடத்திற்கு அழைத்து வரவேண்டிய கிறிஸ்தவர்களே, சீடர்களே நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? நம்மையும் ஒரு பொருட்டென்றெண்ணி, இப்பெரும் வேலையை நம்மிடம் ஒப்படைத்துள்ளாரே, பொறுப்பை நிறைவேற்றத் தயாரா? சிந்திப்போம்.

## 2. ஒளியானது வழிகாட்டுகிறது (Light guides)

ஒளியின் மற்றொரு சிறப்பான வேலை வழிகாட்டுதல், வழிகாட்டுகிற வேலை ஒரு நல்ல வேலை. தடுமாற்றத்தில் இருக்கும் ஒருவனுக்கு உதவி செய்யும் வேலை. ஆனால் இந்த வேலையை உத்தமமாகச் செய்தல் மிக அவசியம், ஏனெனில், தவறு நேர்ந்தால், உதவிக்குப் பதில் உபத்திரவமாக மாறிவிடும்.

இயேசுக்கிறிஸ்துவின் காலத்தில் தவறான வழி காட்டிகளாக இருந்த பரிசேயர்களை கடுமையாகச் சாடுகிறார். "......குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியில் விழுவார்களே" என்கிறார் (மத் 15:14) இன்றைக்கும் மார்க்க ரீதியாக, அதே நிலைதான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வழி காட்டும் நிலையிலுள்ள மதவாதிகள், மதத்

தலைவர்கள் பரிசேயர்களைப் போலத்தான் நடந்து கொள்கிறார்கள். பெரும்பாலும் நரகத்திற்கே அழைத்துச் சென்று கொண்டுள்ளார்கள். ஏனெனில், தங்கள் வழிகாட்டியாக, அவர்கள் வைத்திருப்பவை வித்யாசமானவை. மனிதனால் இயற்றப்பட்ட கோட்பாடுகள், கொள்கை விளக்கங்கள், சட்டப்புத்தகங்கள். கூட்டத்திற்கு ஒன்றாக, குழுவிற்கு ஒன்றாக வைத்துள்ளார்கள். இன்னும் பலர் ஜனங்களின் ரசனைக்கேற்ப தங்களுடைய கொள்கைகளை பச்சோந்தியைப்போல் மாற்றிக் கொண்டேயுள்ளனர். தேவன் என்ன சொல்கிறார் என்பதைவிட, பெரும்பாலானவர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதே அடிப்படைக் கொள்கை. அதற்கேற்றாற்போல் தரிசனம் கண்டோம் என்றும், தேவன் என்னோடு பேசினார் என்றும், சொப்பனம் கண்டேன் என்றும் சொல்லி தனக்குப் பின்வரும் கூட்டத்தை மிகக் கேவலமாக ஏமாற்றி, ஏரேமியா காலத்து தீர்க்கதரிசிகளைப் போல் நடந்து கொள்கிறார்கள். (எரே 23:9-32) ஐ வாசிக்கவும்)

வழிகாட்டுவதற்கு சிறந்த வழிகாட்டி தேவனுடைய வசனந்தான். ஏனெனில் அது தேவனால் கொடுக்கப்பட்டது (2 தீமோத் 3:16, 17) ஏனெனில் அது மனுஷருடைய சித்தத்தினால் உண்டாகவில்லை (2 பேது 1:20, 21) ஏனெனில் அது தேவ பக்திக்குப் போதுமானது (2 பேது 1:3), ஏனெனில் அது தேவனுடைய வாக்கியங்கள் (ரோம 3 : 2) ஏனெனில் அது, ஆவிக்குரிய ஞானப்பால் (1 பேது 2:2), ஏனெனில் அது, ஆவியாயும், ஜீவனாயும் உள்ளது. (யோவா 6:63) ஏனெனில் அது குறைவற்றது (சங் 19:7) ஏனெனில் நாம் அதனுடன் எதையும் கூட்டக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளோம். (உபா 4:2, நீதி 30:6, கலாத் 1:6-9, வெளி 22:18,19)

தேவனுடைய வார்த்தை இவ்வளவு சிறப்புகளைப் பெற்றிருக்கிறபடியால் தான் தாவீது சொல்லும் பொழுது, "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்கிறார். (சங் 119:105). அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்தாருக்கு எழுதும் பொழுது, "ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு" என்றே எழுதுகிறார். (பிலிப் 2:14) அருமையானவரே, நாம் ஒவ்வொருவரும் வசனத்தின் வெளிச்சத்தில் மட்டும் நடப்போம். அநேகர் வெளிச்சத்தில் நடக்க வழி காட்டுவோம்.

### 3. ஒளியானது எச்சரிப்புக் கொடுக்கிறது (Light warns)

ஒளியின் வேறொரு உபயோகமான வேலை எச்சரிப்பு கொடுப்பது, வாகனங்களுக்கு வழிகாட்ட, எப்படி முகப்பு விளக்கு

அவசியமோ அதைப்போல எச்சரிக்கும் சிகப்பு விளக்கும் அவசியமே. சிகப்பு விளக்கின் நோக்கம் அபாயத்தைத் தவிர்ப்பது. மண்ணூர்திகள் சேதமாகமல் இருக்க பின்புறம் 'சிகப்பு விளக்கு உண்டு. விண்ணூர்திகள் சேதமாகமலிருக்க உயர்ந்த கட்டிடங்களின் மீது சிகப்பு விளக்கு உண்டு. நீர் ஊர்திகள் சேதமாகாமலிருக்க கலங்கரை விளக்குகள் உண்டு. இந்த விளக்குகளின் எச்சரிப்பு மீறப்பட்டால் ஆபத்து நிச்சயம். சேதம் நிச்சயம்.

சீடர்களாகிய நாமும், இந்த எச்சரிப்பின் வேலையைச் செய்ய வேண்டுமென்று விரும்பியே இயேசுக்கிறிஸ்து, நம்மை ஒளி என்று சொல்கிறார். இந்த வாழ்வே சதமென்று நினைத்து வாழ்பவர்களுக்கு, இப்பூமியின் வாழ்க்கை நிலையல்ல என்று எச்சரிக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக் கொள்வது அவசியம் என்று எச்சரிக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்து பாவிகளுக்காக இரத்தம் சிந்தினார். அந்த இரத்தத்தால் கழுவப்பட ஒருவன் மனந்திரும்புவது முக்கியம் என எச்சரிக்க வேண்டும். நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்து விவரித்துச் சொல்லி எச்சரிக்க வேண்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன் என்று சொல்லிச் சென்றவர் விரைவில் வருவார். அவரைச் சந்திக்க ஆயத்தமாகு என்று எச்சரிக்க வேண்டும். கொடிய நரகத்தின் நித்திய வேதனையை எடுத்துரைத்து எச்சரிக்க வேண்டும். இப்படிப்பட்டதான எச்சரிப்புகளை நாம் உலகிற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டுள்ளோமா?

நண்பரே, நமதாண்டவர், "நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்" என்று போகிற போக்கில் சொல்லிச் செல்லவில்லை. மேற்சொன்ன மூன்று வேலையையும் நாம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்தே சொல்லியுள்ளார். ஒரு வேளை, ஒளிக்கு இன்னும் வேறு பல பண்புகள் கூட இருக்கலாம். ஆனால் இந்த குறைந்தபட்ச வேலையையாகிலும் செய்வோம். புதிய ஆண்டைக் காணும் பாக்கியத்தை கிருபையாக தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். இந்த ஆண்டில் அவருக்காக சேவை செய்தால் என்ன? நமக்காகத் தன்னுயிர் கொடுத்த ஆண்டவர், நம்மிடத்தில் இதைத்தானே எதிர்பார்க்கிறார். சிந்திப்போம் தீர்மானிப்போம். ஆம், உலகிற்கு வெளிச்சம் காட்டுவோம். நீதியின் பாதையில் உலகை வழி நடத்துவோம். நரக ஆக்கினைக்குத் தப்பித்துக் கொள் என்று உலகத்தை எச்சரிப்போம்".

**EZS ராஜநாயகம்**

# தலைவனாயிருக்க விருப்பம்

ஒரு குடும்பம், ஒரு பள்ளி, ஒரு வியாபாரம், ஒரு படை அல்லது ஒரு நாடு ஆகிய இவை நன்கு இயங்க வேண்டுமானால் ஒரு தலைமை தேவை. அதைப்போலவே சபைக்கும் முன்னோடிகள் தேவை. ஏராளமான மக்கள் வீதிகளிலும், தெருக்களிலும் எந்த ஒரு நோக்கமும் இல்லாமல் சுற்றி அலைந்து திரிவர். அவர்களையெல்லாம் ஓர் அணியில் திரட்டி, ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்துவிட்டால், நல்லதுக்கும் பயன்படுவர், கெட்டதுக்கும் பயன்படுவர். அது தலைமை ஏற்று அவர்களை நடத்துபவருடைய மனநிலையைப் பொருத்தது.

சபையைப் பொறுத்த வரையில் கிறிஸ்துவே தலை (கொலோ. 1:18) உலகிலன் பல்வேறு பாகங்களில் பிராந்திய சபைகள் பரவிக் கிடக்கிறபடியால் அவைகள் ஒவ்வொன்றிற்கும் முன்னோடிகள் தேவை. பிராந்திய சபைகளிலும் கூட கிறிஸ்துவே ஆவிக்குரிய தலை. அவருடைய வார்த்தைகளடங்கிய வேதாகமத்தின் மூலமாக அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும், வழி நடத்தவும் செய்கிறார். ஆனால் அன்றாடப் பணிகளை மேற்பார்ப்பதற்கு மனித முன்னோடிகளும் தேவைப்படுகின்றனரே! அதற்கு சில மனிதர்கள் உருவாக வேண்டும். அல்லது சபை உருவாக்க வேண்டும்.

சபையின் ஆரம்ப நாட்களிலே அப்போஸ்தலருக்கு "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கட்டளை மாத்திரம் கொடுக்கப்பட்டதாக இல்லாமல். (மாற் 16 : 15, 16) குணப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். ஆயினும், அப்போஸ்தலருக்குச் சொல்லப்பட்ட அனைத்துப் பணிகளையும் அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை. ஆகையால், அவர்கள் தங்களுக்கு உதவியாக சில மனிதர்கள் மேல் வைத்து சில அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தையும் பகிர்ந்தளிக்க கர்த்தர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அதன் மூலம் குழந்தைப் பருவத்தில் இருந்த சபை தேவனுடைய உண்மையாக வெளிப்பாட்டில் வேரூன்றி தழைத்து வளர முடிந்தது.

ஊழியம் வளர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் சபைகள் நிர்மாணிக்கப்பட்டபோது, அவைகளைக் கண்காணிக்கவும், நடத்தவும் மூப்பர்களும் அவர்களுக்கு உதவிக்காரர்களும் தேவைப்பட்டார்கள் (1 தீத்து 3, தீத்து 1) ஒரு ஊழியரோ அல்லது உள்ளூர் பிரமுகர் ஒருவரோ

சர்வாதிகாரிபோல் நடந்து கொள்ளா வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட தகுதிவாய்ந்த மூப்பர்களும் உதவிக்காரர்களும் உருவாகும் வரை சபையின் காரியங்களை மேற்பார்ப்பதற்கும், பிரசங்கம், கர்த்தருடைய பந்தி, சபையின் பொருளாதார காரியங்களை கவனிப்பதற்கும் சில சகோதரர்கள் நியமிக்கப்பட வேண்டியதாயிருந்தது.

ஆரம்ப நாட்களில், அப்போஸ்தலர்கள் சில குறிப்பிட்ட மனிதர்க்ளின் மேல் கை வைத்ததால், அற்புத அடையாளங்களைச் செய்யும் ஆற்றலை அவர்கள் பெற்றார்கள். அவர்கள் சபையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் அநேகமாக மூப்பர்களுடைய ஸ்தானத்தில் பணியாற்றினார்கள். இவ்விதமான பரிசுத்த ஆவியின் சிறப்பு வரங்களினால், வேத அறிவு, ஞானம், விசுவாசம், முன்மாதிரியான ஜீவியம் என்று பல்வகையிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். இவைகளெல்லாம் இருந்தாலும் அவர்கள், ஒரே மனைவியையுடையவர்களாகவும், விசுவாசிக்கிற பிள்ளைகள் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் என்ற நியதியையும் பின்பற்றினார்கள். பரிசுத்த ஆவியின் அனுக்கிரகம் அவர்களுக்குத் துணை நின்றதால் குறுகிய காலத்தில் அவர்கள் மூப்பர்களுடைய தகுதியை அடைந்தார்கள், சபையும் பலுகிப் பெருகிற்று.

அன்றைக்கு அப்போஸ்தலராயிருக்க அழைக்கப்பட்டவர்கள் யாரும், இன்றைக்கு உயிரோடு இல்லை. பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றவர்களோ, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களோ கிடையாது. ஆகையால் மூப்பர்களுக்குள்ள தகுதிகளை விரைந்து பெற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்புகள் குறைவு. மூப்பர்களுக்குள்ள தகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு காலமும், பயிற்சியும் தேவைப்படுகிறது.

மூப்பர்களைக் கொண்ட சபைகள் இருப்பது விரும்பத்தக்கது. ஏனெனில் வேதாகமம் ஒரு சபை பூரணமடைவதற்கு மூப்பர்களும், உதவிக்காரர்களும் தேவை என்று குறிப்பிடுகின்றது. தகுதியில்லாத நபர்களை பேருக்காக, மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் ஏற்படுத்துதல் கூடாது. தகுதியுள்ளவர்கள் இரண்டு மூன்று பேராவது உருவாகும் வரை சபைக் காரியங்களை கவனிப்பதற்கு மாற்று ஏற்பாடுகள செய்வது நல்லது. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களுக்கு இன்னின்ன தகுதிகள் வேண்டுமென்று குறித்திருப்பது விளையாட்டுக்கல்ல. அதற்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு. ஆகவே,

மாற்று ஏற்பாடு, என்பதையே நிரந்தரமாக்கிவிடாமல் விரைவில் அத்தகைய தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு அங்கத்தினரும் முயலவேண்டும்.

2 தீமோ 3ம் அதிகாரத்திலும், தீத்து 1ம் அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிற தகுதிகளில் பெரும்பாலானவைகளை (ஒரே மனைவியையுடைய கணவன், விசுவாசமுள்ள குழந்தைகள், போதிக்கும் ஆர்வம், நூதன சீஷனாயிராமை நீங்கலாக) அடைய ஒவ்வொரு கிறிஸ்தவனும் (ஆண்களும், பெண்களும்) முயல வேண்டும். காலம் செல்லச் செல்ல இதர தகுதியையும் அடைய முடியும். பெண்களும் கூட ஒரே மனைவியையுடைய கணவன், ஆண்களும் அடங்கியுள்ள கூட்டத்தில் பிரசங்கித்தல் ஆகியவை தவிர மற்ற காரியங்களில் தேர்ச்சி பெறலாமே! வேத வசனங்களில் தேர்ச்சியடைந்துள்ள பெண்கள், சகோதரிகள் மற்றும் சிறு பிள்ளைகள் அடங்கிய கூட்டத்தில் போதிக்கலாம்.

மூப்பர்களாகும் தகுதிக்கு பெண்களை வேதாகமம் விலக்கி வைத்திருக்கிற காரணத்தை அறிய உங்களுக்கு ஒருவேளை ஆவல் இருக்கும். தேவன், பெண்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுகிறார் என்று சொல்லலாமா? அல்லது அது, பெண்கள் ஆண்களைப்போல முக்கியமானவர்கள் அல்ல என்பதாலா? அப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தை தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. வேதாகமத்தை ஊன்றி கவனித்துப் படித்தால், ஆண்களுக்கும், பெண்களுக்கும், தேவன் வித்யாசமான பணிகளை ஒதுக்கியிருக்கிறார் என்பது தெரியவரும். அப்படி அவர் வரையறுத்து வைத்திருப்பதற்கு ஒரு நோக்கம் உண்டு. நாம் எல்லோரும் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். கர்த்தர் சர்வ ஞானம் உள்ளவர். அவருடைய காரியங்களை சந்தேகிப்பதோ, கேள்விகேட்பதோ தகாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பணிகளைச் செவ்வையாய்ச் செய்வது தான். அவ்வாறு நாம் நம்முடைய கடமைகளை நிறைவேற்றும்போது, அவருடைய சித்தம் நிறைவேறும். நாம் ஒவ்வொருவரும் நமக்கேற்ற ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

பிராந்திய சபையில் உள்ள ஆண் அங்கத்தினர்கள் எல்லாருமே மூப்பர்களாகும் தகுதியை அடைய முயலவேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார். நீங்கள் அப்படிச் செய்வது ஒரு நல்ல வேலையை விரும்புவதாகப் பொருள். நீங்கள் அப்படிப்பட்ட ஒரு நல்ல வேலையை விரும்பாமற்போனால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஒருநாளும் சம்மதிக்கக் கூடாது. ஏனெனில் உண்மையாகவே அது ஒரு பெரிய வேலை. மகத்தான பொறுப்புள்ளது. மனிதரால் மெச்சிக்

கொள்ளப்படுவதற்கு யாரும் மூப்பராகக் கூடாது. ஆனால் அந்தப் பணிக்கு வர விரும்புகிறவர்கள் சபையின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டும்; சேவை செய்ய வேண்டும். தன்னுடைய நேரத்தை சபை வேலைக்கு அர்ப்பணிக்க வேண்டும். மற்றவர்களை நேசிக்க வேண்டும். மற்றவர்களோடு இணைந்து பாடுபடவேண்டும். ஆத்துமாக்களை நேசித்து, இரட்சிப்புக்காய் பாடுபடவேண்டும்.

மூப்பர்கள் பிராந்திய சபைக்கு முன்னோடியாக இருக்க வேண்டும். சபையாகிய மந்தையைக் கண்காணிக்க வேண்டும். அங்கத்தினர்கள் ஆவியில் வளர உணவூட்ட வேண்டும். முன்மாதிரியாக இருக்க வேண்டும். மற்றவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். பலவீனரைத் தாங்க வேண்டும். சத்தியம் போதிக்கப்படவேண்டும். கள்ளப் போதகங்களைத் தோலுரித்துக் காட்ட வேண்டும். தேவன் சபைக்கு ஒப்புவித்துள்ள வேலையைச் செய்ய வேண்டும். இம்மாதிரியான தலைமையால் சபை வலுவடையும், வளர்ச்சி அடையும், முன்னேற்றம் காணும்.

ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்கள் இருப்பது நல்லது. இம்மாதிரியான தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு உலகெங்கிலும் பயிற்சிகள் தரப்பட வேண்டும். உலகெங்கிலுமுள்ள சபையின் வளர்ச்சிக்கு இது தான் தேவனுடைய திட்டம். இத்திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டால், மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு முறையைக் காட்டிலும் சிறந்தது.

J.C. சோட்

## பெண்கள் பகுதி

# "சபைக்கடுத்த காரியங்களில் பெண்கள்"

ஆதித்திருச்சபையில், ஆவிக்குரிய காரியங்களில் பெண்களின் பங்கு பற்றி வேதாகமத்தின் பல பகுதிகள் எடுத்துக் காட்டுகிறது. அவைகளில் ஒன்று சபை கூடி வருவதற்கு தங்கள் வீடுகளை உபயோகப்படுத்த அனுமதிப்பதாகும். உடன் வேலையாளாகிய பிலமோனுக்கு சிறையிலிருந்து பவுலடியார் எழுதும்போது,"பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்பாவுக்கும், உமுடைய வீட்டிலே கூடி வருகிற சபைக்கும் எழுதுகிறதாவது". (பிலமோன் 1:2) என்கிறார்.

கொலோ 4:15ம் வசனம் இவ்விதமாகச் சொல்கிறது. "லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள்".

ரோமர் 16:5 "அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள்".

ரோமர் 16 : 23ல் "என்னையும் சபையனைத்தையும் உபசரித்து வருகிற காயு உங்களை வாழ்த்துகிறான்".

இன்று உலகின் பல பாகங்களில் கிறிஸ்துவின் சபை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் போல் சபையானது அப்போஸ்தலர்கள் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டு கிறிஸ்துவால் துவங்கப்பட்டதாயினும் உலகத்தின் முடிவு பரியந்தம் அவருடைய சபை தொடர்ந்து இருக்குமென வாக்குக் கொடுத்துள்ளார். (தானியேல் 2:44, மத்தேயு 16:18) அதன் பொருள் என்னவெனில் உலகின் ஒவ்வொரு பாகத்திலும், எல்லா சந்ததியினரும் சத்தியத்தினால் போதிக்கப்படுவார்கள். அவ்வாறு போதிக்கப்பட்டு வசனத்திற்கு கீழ்ப்படிந்த கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடி வரும்பொழுது புதிதான சபைகள் பெருக வாய்ப்பு ஏற்படுகிறது.

முதல் நூற்றாண்டுக் காலத்தில் புறமார்க்கத்தாருக்கு விக்கிரக வணக்கம் செய்ய கோயில்கள் இருந்த போதிலும், கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடிவந்து ஆராதிப்பதற்கு பொதுவான இடங்களோ, கட்டிடங்களோ குறிப்பாக இல்லை. மாறாக சிறு கூட்டங்களாக வீடுகளில் கூடி ஆராதித்து வந்தார்கள். இவ்வாறு செய்வதினால் அந்த வீட்டார் தங்களையும், தங்களிடத்திலுள்ளதையும் சபையின் மேம்பாட்டுக்கு மனமுவந்து கொடுக்க அவர்கள் இருதயத்தில் ஆர்வத்தை ஊட்ட ஏதுவாயிருந்தது.

இன்றைக்கும் அம்மாதிரி சூழலில் அவ்வீட்டிலுள்ள பெண், ஒவ்வொரு வாரமும் சபை கூடிவருவதற்கென்று விசேஷமாக சுத்தம் செய்ய வேண்டும். அங்கத்தினர்கள் கலந்து கொள்ள கர்த்தருடைய பந்தியை தயார் செய்ய வேண்டும். அவருடைய சரீரத்தின் நினைவாகவுள்ள புளிப்பில்லாத அப்பத்தையும், நமக்காகச் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தின் அடையாளமான திராட்சரசத்தையும் ஆயத்தமாக்க வேண்டும் (மத்தேயு 26:26-28). வேதாகமம், பாடல் புத்தகங்கள் போன்றவற்றை வேதபாட வகுப்பிற்கும், ஞாயிறு ஆராதனைக்கும் எல்லோருக்கும் கிடைக்கும் படியாகச் செய்ய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்கள் வீட்டுக்கு ஆராதனைக்காக வரும்பொழுது அவர்களை வரவேற்று வாழ்த்துத் தெரிவிக்க தங்கள் கணவரோடு ஆயத்தமாயிருக்க வேண்டும். வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் ஒருபுறமாக வைத்து எல்லோரும் உட்கார இடம் கொள்ளும்படியாக இருக்கைகளை ஒழுங்கு செய்ய வேண்டும். மறுபடியும் ஆராதனை முடிந்து எல்லோரும் சென்ற பிறகு, மீண்டும் சுத்தம் செய்து, பழையபடி எல்லாவற்றையும் சீராக்க வேண்டும்.

பொதுவாக இம்மாதிரி வேலையைச் செய்கின்ற குடும்பத்தின் பணி அத்தோடு ஓய்ந்து விடுவதில்லை. தனிப்பட்ட சகோதர சகோதரிகளுக்கு ஏதாவது உதவி தேவையெனில் இவர்களுக்கு முதலாவது அழைப்பு வந்துவிடும். ஒருவரை ஊக்கப் படுத்தவோ அல்லது ஒருவருக்கு ஆலோசனை சொல்லவோ, வியாதியாய் இருப்பவருக்கு உதவவோ அல்லது வேறு ஏதாவது அவசர காரணமாகவோ இருக்கலாம். இப்படிப்பட்ட உதவிகளை கர்த்தருடைய் பிள்ளைகளுக்குச் செய்ய அர்ப்பணிப்பும், ஆர்வமும் வேண்டும். இன்றைக்கும் கிறிஸ்தவர்கள் தங்கள் வீட்டைத் திறந்து சபையாய் தேவனை ஆராதிக்க விருப்பமுடையவர்களாய் இருந்தால் எத்துணை அருமையாக இருக்கும்.

சபையானது வளர்ச்சியுறும் பொழுது சபை கூடி வருவதெற் கென்று ஒரு இடத்தை வாடகைக்கு எடுப்பதோ அல்லது வாங்குவதோ அல்லது கட்டிடம் கட்டுவதோ ஒருவேளை தேவையாக இருக்கலாம். அதை பராமரித்தல் போன்ற வேலையை சபையில் உள்ள பெண்கள் செய்யலாம். பெருக்குவது, துடைப்பது, சுத்தம் செய்வது, அங்குள்ள தோட்டத்தைப் பராமரிப்பது, செடிகள் வளர்ப்பது போன்றவற்றை கிறிஸ்தவர்கள் பகிர்ந்து கொள்ளலாம். கர்த்தருடைய பந்தியை ஆயத்தம் செய்வதற்கும், ஆராதனை முடிந்து அவைகளை சுத்தம் செய்வதற்கும், மனமுவந்து செய்யக் கூடியவர்கள் சுழற்சி முறையில் உதவலாம்.

ஏனெனில் நாம் தேவனை ஆராதிக்கும் இடத்தை எந்த அளவில் வைத்திருக்கிறோமென்பதை வைத்து நம்முடைய பக்தியை எடைபோட முடியும். எல்லாவற்றையும் சீராகவும், சிறப்பாகவும் வைத்திருக்க விசேஷித்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பெண்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறுபிராயம் தொட்டே சபை கூடி வருகின்ற இடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி போதிக்க வேண்டும். அவர்கள் தங்கள் கை, கால்களை சுவற்றில் வைக்கக்கூடாதென்றும், சபைப் புத்தகங்களில் எழுதவோ, கிழிக்கவோ கூடாதென்றும் போதிக்கப்படவேண்டும். சிறுவர்களும், பெரியவர்களும் சபையைப் பற்றிய அனைத்துக் காரியத்தைப் பற்றியும் சிறப்பான பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

Betty Choate    Rachel Nayagam

# எல்லாம் புதிதாயின

நாம் காணும் உலகில் ஆண்டுகள் புதிதாகின்றன! நமது ஆடைகள் ஆபரணங்கள், அரசின் பொருளாதாரக் கொள்கைகள் எல்லாம் புதிதாகுகின்ற இந்நாட்களில் நாம் புதிதாக வேண்டாமா? "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17) ஆம் ஒருவன் கிறிஸ்துவக்குள் இருந்தால் மட்டுமே புத்தம் புதிய மனிதனாக இருக்க முடியும். கிறிஸ்துவுக்கு வெளியே புதிய மனிதன் இல்லை! ஆகையால் இப்புத்தாண்டில் நாம் புதிதாவோம்.

நமது வாழ்க்கை ஆண்டாண்டு காலமாய் நிலைத்திருக்கக் கூடியதல்ல. ஆண்டுகள் தோன்றி மறைவது போல நமது வாழ்க்கையும் தோன்றி மறையும். "மாம்சமெல்லாம் புல்லைப் போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது. புல் உலர்ந்து, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" (1 பேதுரு 1:24, 25) தேவனுடைய வசனத்தை தவிர மற்ற எல்லாமே அழியக் கூடியதே. இன்று நமக்கு தேவனுடைய வசனம் கிறிஸ்துவின் சுவிசேஷமே! இவ்வசனமே இரட்சிப்பிற்கு தேவபலனாக இருக்கிறது (ரோமர் 1:16) நாம் இரட்சிப்படைய வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம் (1 தீமோ 2:4) அவருடைய விருப்பத்தை நாம் நிறைவேற்றி தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும்பொழுது நாம் உலக அழிவிலிருந்து காக்கப்பட முடியும். (1 யோவான் 2:17)

ஆண்டுகள் தோன்றி பின்பு மறைந்தாலும் நாம் நிச்சயம் நிலைத்திருப்போம். நம்மை நிலைத்திருக்கும்படி செய்யக் கூடிய வல்லமை சுவிசேஷத்தில் மட்டுமே உள்ளது. எனவே இன்றே இப்புத்தாண்டில் அவருடைய சத்தத்தைக் கேட்போம். (எபி 3:15) நாளை . . . நாளை என்று நாட்களை கழிப்பதினால் ஒரு லாபமும் இல்லை! நாளையதினம் என்பது அதிக காலதமாதமாகும். "இன்றே இரட்சண்ய நாள்" என்று வேதம் கூறுகிறது (2 கொரி 6:2) சுவிசேஷத்திற்குக் கீழ்படிய பெரும் தடையாக இவ்வுலகம் இருக்கிறதா? இவ்வுலகம் ஒரு நாளிலே அழியப்போகிறது! (1 யோவான் 2:17 2 பேதுரு 3 : 10) அக்கினியால் அழிந்து போவதற்கு இவ்வுலகம் காத்துக் கொண்டிருக்கிறபடியால் நாம் இந்த அழிவிலிருந்து காக்கப்பட இன்றே கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிவோம். கிறிஸ்துவுக்குள் புதிதாவோம்! அவருக்குள் புது வாழ்வுபெற இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் பொழுது பழையவைகள் ஒழிந்து எல்லாம் புதிதாகும்! இப்புத்தாண்டில் புதிதாவோம்.

கே. பாஸ்கர், கோவில்பட்டி

# "உதவி செய்யுங்கள்"

பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக்கேயர் சபையாருக்கு எழுதும்போது "சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால்...... திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள்..... (1 தெச 5:14) என்கிறார். அதாவது கிறிஸ்துவின் சபையில் உள்ளவர்கள் உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று போதிக்கிறார். வேதம் ஒன்றை போதிக்கிறதென்றால் தேவனும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும், அதை எழுதிய எழுத்தாளரும் போதிக்கிறார்கள் என்று அர்த்தமாகும். மேலும் கலா 6:9ல்' நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல்" இருக்க வேண்டும் என்று அவர்கள் நம்மை உற்சாகப்படுத்துகிறார்கள். எனவே உதவி என்பது என்ன? கட்டாயம் உதவி செய்யத்தான் வேண்டுமா? உதவி செய்வதன் மூலம் நமக்கு என்ன நன்மை? என்பதை வேத வசனங்களைக் கொண்டு இக்கட்டுரையில் ஆராய்ந்து பார்ப்போம்.

பொதுவாக மனிதனின் சிந்தனையில் "நமக்கு உபதேசம் செய்பவர்கள் முதலில் அதன்படி செய்தார்களா? அல்லது ஊருக்குத்தான் உபதேசமா? என்ற எண்ணம் எழுவதுண்டு. அதில் தவறொன்றுமில்லை. அது நியாயமே. ஏனெனில் வேதம் கூட, 1 தீமோ 4:16ல் உன்னைக் குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை கொண்டிரு இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்: என்றே கூறுகிறது. அதன்படி "உதவி செய்ய வேண்டும்" என்று நமக்கு உபதேசம் செய்கிறவர்கள் செய்தார்களா? செய்கிறார்களா? என்று பார்த்து நம் சந்தேகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, உபதேசித்தவர்களைப் பின்பற்றுவோம்.

ஆதியிலே தேவன் ஆதாம், ஏவாளை சிருஷ்டித்ததோடு நில்லாமல், அவர்களைப் போஷிக்கும்படியாய் "பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவிதைப் பூண்டுகளையும், கனிமரங்களையும் உண்டாக்கி அவைகளை ஆகாரமாய் கொடுத்தார்" (ஆதி 1:29). மனுஷனாகிய ஆதாம் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று ஏற்ற துணையாக ஏவாளை கொடுத்து உதவினார். (ஆதி 2:18) தன்னால் பரிசுத்தமாய் உண்டாக்கப்பட்ட ஆதாமும், ஏவாளும் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு பாவம் செய்த பொழுதும் நிர்வாணியாய் இருந்த அவர்கள் மேல் இரக்கம் கொண்டு தோல் உடைகளை உண்டாக்கி உடுத்தினார்" (ஆதி 3:21) பாவம் செய்த அவர்களுக்கு தண்டனை கொடுத்து தோட்டத்தைவிட்டுத் துரத்தியபோதும், மீண்டும் அவர்கள் பாவ

அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் திட்டத்தை அப்பொழுதே உருவாக்கினார்."உனக்கும் (சாத்தானுக்கும்) ஸ்திரீக்கும் உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார்" (ஆதி 3:15) என்று கூறி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினார். பாவத்தில் உழன்று, சந்தோசம், சமாதானத்தை இழந்து, திக்கற்ற நிலையில், பலவீனப்பட்டு நிற்கும் மனித குலத்தை மீட்கும்படி "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோ 3:16) "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த நமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோ 5:8) இதைக்காட்டிலும் பேருதவி உண்டோ?

இயேசுகிறிஸ்து இவ்வுலகில் நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தார். "பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சுகப்படுத் தினார்" (மத் 8:16) பசியோடு இருந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார் (மாற் 8:1-9) துக்கத்தில் கண்ணீரோடு இருந்தவர்களின் துன்பத்தில் பங்குபெற்று இயேசுவும் கண்ணீர் விட்டார் (யோ 11:35) மக்களின் குறைகளை நிறைவாக்கினார். இயேசு மக்கள் மேல் 'மன உருக்கம்' உள்ளவராகவும் (மத் 14:14) அவர்களின் நிலை கண்டு பரிதபிக்கிறவராகவும் (மாற் 8:2) எருசலேம் பட்டணத்து மக்களின் அழிவை எண்ணிப் பார்த்து கண்ணீர் விடுகிறவராகவும் (லூக் 19:41) தன்னைப்பிடிக்க வந்த எதிராளியின் காது அறுக்கப்பட்டபோது அவனை சுகப்படுத்தியதன் மூலம் எதிராளியையும் நேசிக்கிறவராகவும், (லூக் 22:34-51) தன்னைச் சிலுவையில் அறைந்த பகைவர்கள் அடையப்போகும் மாபெரும் துன்பத்திலிருந்து விடுவிக்க எண்ணி, பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று மன்றாடுபவராகவும் காணப்பட்டார். பட்டணங்கள், கிராமங்கள் தோறும் நடந்தே சுற்றித் திரிந்து மக்களுக்கு நன்மை செய்தார் (மத் 9:35) எல்லாவற்றிற்கும் மேலாக தன்னையே ஜீவபலியாக கொடுத்து நாம் எலோரும் பாவ மரணத்திலிருந்து விடுதலை பெறும்படியாய் உதவி செய்தார். இப்பொழுதும் நம்முடைய பலவீனங்களுக்காக பரிதபித்து பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசுகிற பிரதான ஆசாரியராய் செயல்பட்டு வருகிறார். (எபி 4:15)

யோவான் 1:12ன் படி இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டு தேவனுடைய பிள்ளை களாயிருக்கிற நம்மிடத்தில் பிதாவாகிய தேவனுடைய பண்பு காணப்பட வேண்டாமா? ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவைத்

தரித்துக் கொண்ட நாம் கிறிஸ்துவின் சாயலாய் விளங்க வேண்டாமா? (கலா 3:27) பிதாவும், குமாரனும் இரக்கமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நாமும் இரக்கமுள்ளவர்களாயிருப்போம்."பலவீனரைத் தாங்குவோம்".

பரிசுத்த ஆவியானவர் இயேசு சொன்னவைகளையும் செய்தவைகளையும் அப்போஸ்தலர்களுக்கு நினைவூட்டி, (யோ 14:26) சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தி, வரப்போகிற காரியங்களையும் அறிவித்து (யோ 16:3) நம்கையில் இருக்கிற வேதவாக்கியங்களை அவர்கள் மூலம் அருளச் செய்தார் (2 தீமோ 3:16) இந்த வேதவசனங்களை ஆராய்ந்து பார்த்து ஒன்றான மெய் தேவனையும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிந்து முடிவில் நித்திய ஜீவனை அடையயும்படியான (யோ 3:35; 17:3) மாபெரும் உதவியை பரிசுத்த ஆவியானவர் நமக்கு செய்திருக்கிறார். இன்னும் ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்யும்படியாக, வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோ 8:26). அப்போஸ்தலர்களும் 2 கொரி 11:24-27 முடிய பவுல் கூறுவதுபோல அநேக பாடுகள் பட்டு, இரத்த சாட்சிகளாகவும் மரித்தார்கள். எதற்காக? உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்க, ஏனெனில் அந்த சுவிசேஷத்தை கேள்விப்படுபவர்கள், கர்த்தர் இன்னாரென்று அறிந்து விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுக்கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்து, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளும்பொழுது ஒருவன் இரட்சிக்கப்படுகிறான். இக்காரியம் இன்னும் தொடர்கிறது. அன்று இச்சுவிசேஷத்தை பிரசங்கித்தவர்களாகிய அப்போஸ்தலர்கள் இன்னும் நமக்கு செய்து கொண்டிருக்கிற இந்த உதவி மறக்கக் கூடியதா? (ரோ 10:13-14, மத் 28:19, மாற் 16:16) நமக்கு போதித்த இவர்கள் முதலில் செய்து காட்டியுள்ளார்கள். எனவே"பலவீனரைத் தாங்கி, திக்கற்றவர்களைத் தேற்ற வேண்டும்" என்ற உபதேசத்தை நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக் கொள்வோம். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத் 5:9) ஆம் நாம் மற்றவர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் துன்பங்களைக் களைந்து, உதவிகள் செய்து சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாம் மெய்யாகவே தேவனுடைய புத்திரர்கள் என்பதை நிரூபிப்போம்.

## உதவி செய்வது என்பது தேவனுடைய சட்டம்

"உன்னில் நீ அன்பு கூறுவது போல பிறனிலும் அன்பு கூறுவாயாக" (லேவி 19:18)"உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை

நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களை பொறுக்காமலும், எளியவனுக்கு, பரதேசிக்கும் விட்டுவிட வேண்டும் (லேவி 23:22) நான் கர்த்தர்" என்று பழைய பிரமாணத்தில் தேவன் கட்டளையிடுகிறார். நெகேமியா, எஸ்றா போன்றவர்களும் "ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்கை அனுப்புங்கள்" (நெகே 8:10) என்கிறார். இச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்த இஸ்ரவேல் மக்கள், பங்குகளை அனுப்பவும், சந்தோசங்கொண்டாடவும் போனார்கள் (நெகே 18:12) யோபு போன்ற நீதிமான்கள் தேவனின் சட்டத்திற்கு கீழ்ப்படிந்து தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். (யோபு 30:24-25).

புதிய பிரமாணத்தின் கீழ்வாழும் நமக்கும் இதுவே சட்டம். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலா 6:2)"இது கிறிஸ்துவின் கட்டளை. சாதாரண கட்டளை அல்ல, "ராஜரீக பிரமாணம்" (யாக் 2:8) இயேசுவிடம் வந்த ஐசுவரியவான் ஓடிவந்து அவருக்கு முன் முழங்கால்படியிட்டு "நல்ல போதகரே நித்திய ஜீவனை சுதந்தரிக்க நான் என்ன செய்ய வேண்டும்"? என்று கேட்டான்.

ஒரு ஐசுவரியவான் ஓடிவருவதும், வழியில் எல்லோருக்கும் முன்பாக முழங்கால் படியிடுவதும் அவனுடைய தாழ்மையைக் காட்டுகிறது. அவன் கேட்ட கேள்வி அவனுடைய மேலான நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் சிறு வயது முதல் பத்துக் கட்டளைகளையும் கடைப்பிடிப்பவன். இயேசுவிடம் வரும்போது ஆசையாய் ஓடிவந்தவன், "மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்" அது எந்த வார்த்தை?

இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து, ஆம் இவ்வளவு கட்டளைகளை நிறைவேற்றியவன் "ராஜரீகப்பிரமாணத்தை" நிறைவேற்றாத ஒரே ஒரு குறைவினால் நித்திய ஜீவனை இழந்து விடக்கூடாதே என்ற ஆதங்கத்தால் "நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குகொடு" என்று கூறிய இந்த வார்த்தையை, அதாவது தேவனின் சட்டத்தை நிறைவேற்ற மனமில்லாததால் அவன் நித்தியத்தை இழந்தான். (மாற் 10:17-22) லூக் 16:19-31 - இப்பகுதியில் கூறப்படும் ஐசுவரியவான் தம் வாசலருகே, தன் கண் முன்னால் கிடந்த தரித்தரன் லாசருவுக்கு இரக்கங்காட்டி ராஜரீக சட்டத்திற்கு கீழ்ப்படிந்து உதவி செய்யாததால் ஆபிரகாமின் மடியை இழந்தான். பாதாளத்தின் வேதனையை அடைந்தான். இந்தியக்குடி மகனாகிய நான், இந்திய அரசியல் சட்டங்களுக்கு முற்றிலும் கீழ்ப்படிவது மிகவும் அவசியமாகும். அப்படிப்போலவே தேவனுடைய ராஜ்ஜியத்தின் குடி மக்களாகிய நாம் தேவனுடைய ராஜரீக பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, பலவீனரைத் தாங்குவது அவசியமல்லவா?

## உ. உதவி செய்வது என்பது......மாசில்லாத பக்தி :

அப்போஸ்தலனாகிய யாக்கோபு மாசில்லாத சுத்தமான பக்தியை விளக்கும் பொழுது "திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக்காத்துக் கொள்ளுகிறதுமே" என்று கூறுகிறார் (யா 1:27) உலக பாவத்தால் நம்மைக் கறைபடாமல் காத்துக்கொள்வது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே முக்கியத்துவம் 'பலவீனர்களுக்கு உதவி செய்வதற்கும் கொடுக்க வேண்டும்.

மாற்கு 10:17 முதல் 22 வரையில் ஏற்கனவே நாம் சந்தித்த ஐசுவரியவான் ஓடிவருவதும், வழியில் முழங்கால் படியிடுவதும், இயேசுவை நல்லபோதகரே என்று வாழ்த்துவதும் அவனுடைய தாழ்மையை மட்டுமல்ல, பக்தியையும் காட்டுகிறது. நியாயப்பிரமாணம் முழுவதையும் கடைப்பிடித்து வருவதை மிகப் பெரிய பக்தியாகக் கருதினான். தான் நித்திய ஜீவனை அடைய தடையொன்றும் இராது என்று கூட நினைத்திருப்பான். சுற்றிலும் இருந்த மக்கள் ஐசுவரியவானின் செயலைக் கண்டும், பேச்சைக் கேட்டும் இவன் ஒரு சிறந்த பக்திமான் என்றுகூட முடிவு செய்திருப்பார்கள். ஆனால் அவன் தரித்திரருக்கு கொடுக்க மனமில்லாதவனாயிருந்ததால் அவனுடைய "பக்திக்குரிய செயல்கள் அனைத்தும் வீணாயிற்று." அதேசமயம் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்ட சகேயு "தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன்" என்று தானாகவே முன்வந்து சொன்னதால், அவனுடைய பக்தி அங்கீகரிக்கப்பட்டு ஆபிரகாமின் குமாரரில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். (லூ 19:8, 9) இன்றும் நம்மில் அநேகர் சபைக்குரிய காரியங்களில் ஓடி ஓடி வேலை செய்கிறோம். சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறோம். யாவரிடமும் தாழ்மையுடன் நடந்து கொள்கிறோம். நன்றாய் ஜெபிக்கிறோம். பாவமாய் தோன்றுகிற அனைத்து காரியங்களையும் விட்டு விடுகிறோம். சபை கூடிவருதலை விட்டு விடாமல் இருக்கிறோம். இவை யாவும் நல்லதே. ஆனால் இவை மட்டும் பூரணமான பக்தியாகாது. உபத்திரவத்தில் இருப்பவர்களை விசாரிப்பதுமாகிய செயலும் நம்மில் காணப்பட்டாலே நமது பக்தி ஒரு குறையுமில்லாமல் பூரணப்படும்.

## ௩. உதவி செய்வதென்பது . . . . . . நீதி :

லூக்கா 10:29-34ல் தன்னை நீதிமான் என்று காட்ட நினைத்தவனின் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்த இயேசு நல்ல சமாரியனின் உவமையைக் கூறுகிறார். அதில் கள்ளர் கையில் அகப்பட்டு, வழியோரத்தில் குற்றுயிராய் கிடந்த மனுஷனுக்கு உதவி செய்யாமல், பக்கமாய் விலகிச் சென்ற, உலகத்தாரால் பக்திமான்கள்

என்று அழைக்கப்பட்ட ஆசாரியனையும், வேலியனையும் இயேசு நீதிமான் என்று அழைக்கவில்லை. ஆனால் திக்கற்ற நிலையில், உதவியற்ற சூழ்நிலையில் கிடந்த அந்தமனுஷனைக் கண்டு, மனதுருகி, கிட்டவந்து, அவனுடைய காயங்களைக் கட்டி, சத்திரத்தில் சேர்த்து பராமரித்த, சமுதாயத்தால் பாவி என்று ஒதுக்கப்பட்ட சமாரியனையே நீதிமான் என்று இயேசு கூறுகிறார். நம்மை பக்திமானாகவும், நீதிமானாகவும் அடையாளம் காட்டுவது "பலவீனரைத் தாங்கும்" செயலாகும்.

மத்தேயு 25:35-46ல் இயேசு நியாயத்தீர்ப்பின் காட்சியை நம் கண்முன் நிறுத்துகிறார். ராஜா தமது வலது. பக்கத்தில் நிற்கும் நீதிமான்களைப் பார்த்து (37) உங்களுக்காக ஆயத்தப் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்கிறார். அதற்குரிய காரணத்தை விளக்கும் பொழுது"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று" அந்த நீதி பதியும், ராஜாவுமாகிய இயேசு கூறுகிறார். அவர்கள் எதைச் செய்தார்கள்? பசியாய், தாகமாய், அந்நியனாய், வஸ்திரமில்லாதவனாய், வியாதியாய், காவலில் வைக்கப்பட்டவனாயிருந்தவர்களுக்கு உதவிகள் செய்தார்கள். அந்த உதவியை நீதியாகக் கருதியதால்தான் இயேசு அவர்களை நீதமான்கள் என்று அழைக்கிறார்."தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று ஒருவன் சொல்லியும், காண்கிற சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யன் அவனுடைய பக்தி வீண். வாரியிரைப்பதும், ஏழைகளுக்குக் கொடுப்பதையும் தேவன் நீதியாகக் கருதுகிறார் (2 கொரி 9:9) நாம் இந்த நீதியை நிறைவேற்றுவோமானால் நியாயதிபதியாக இயேசு வரும்பொழுது நம்மை பார்த்து "வாருங்கள் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே" என்பார் (மத் 25:34) இந்நீதியை செய்யத் தவறினாலோ" சபிக்கப்பட்டவர்களே .... நித்திய அக்கினியிலே போங்கள்" என்பார் (மத் 25:41)

## 4. உதவி செய்வது என்பது....தேவனை மகிமைப்படுத்துதல்:

நீதி 3:9ல் உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு என்றும், யோ 12:26ல் ஒருவன் கிறிஸ்வுக்கு ஊழியம் செய்வது கர்த்தரை கனம் பண்ணுகிற காரியம் என்றும், 1 பேதுரு 2:12ல் நல்ல நடக்கையாகிய நற்கிரியைகளால் தேவனை மகிமைப்படுத்த முடியும் என்றும். நீதி 14:31ல் தரித்திரனுக்கு தயை செய்கிறதின் மூலம் தேவனை கன பண்ணமுடியும் என்றும் கூறுகிறது. அதாவது காணிக்கை கொடுப்பது, ஊழியம் செய்வது, நல்ல நடக்கை இவைகள் மூலம் தேவனை மகிமைப்படுத்த நாம் பிரயாசப்படுகிறோம். ஆனால் தரித்திரனுக்கு தயை செய்வதும் தேவனை மகிமைப்படுத்துகிற காரியம் என்று அறிந்தும் செய்யாமலிருப்பது எப்படி? இதையேகொரிந்து சபையார்

செய்து தேவனை மகிமைப்படுத்தினார்கள் (2 கொரி 9:13) கொரிந்தியரிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொண்டவர்களும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். பேதுருவும், யோவானும், சப்பாணி எழுந்து நடக்கும்படியாய் உதவி செய்ததால் அவனும், அதைப்பார்த்த மக்களும் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அப் 3:8) கர்த்தருடைய கிருபையால் அநேக உதவிகளைப் பெற்ற நாம் பலவீனரைத் தாங்குவதன் மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அப்பொழுது "என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நானும் கனம் பண்ணுவேன்" என்று (1 சாமு 2:30) வாக்குகொடுத்த தேவனின் கனத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

## 5. உதவி செய்வது என்பது . . . . . நமது கடமை.

மக்கதோனியாவிலும், அகாயாவிலுமுள்ளவர்கள் எருசேலமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்கு உதவி செய்ய விரும்புகிறார்கள். (ரோ 15:26) இதைக் குறித்து பவுல் "இப்படிச் செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாயும் இருக்கிறார்கள்" (ரோ 15:27) என்கிறார். சரீர, ஆத்மீக நன்மைகளை பெறும்படியாய் நமக்கு தேவ பிள்ளைகள் உதவி செய்திருக்கிறார்கள். இவ்விதமான நன்மையை இலவசமாய் பெற்ற நாம் மற்றவர்களுக்கும் நன்மை செய்வது நம் கடமையல்லவா? சுவிசேஷத்தை பிரசங்கிப்பது என்மேல் விழுந்த கடமை என்று (1 கொ 8:16) பவுல் கூறுகிறார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கடமையோ அதே அளவு பலவீனரைத்தாங்குவதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஆபிரகாமில் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தான். சோதோமின் ராஜாவை எதிரிகள் வென்று அந்நாட்டின் பொருள்களைக் கொள்ளையிட்டபோது, லோத்தையும் அவன் பொருள்களையும் சேர்த்து கொண்டு போய்விட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட ஆபிரகாம் உடனே தன்வேலையாட்களுடன் புறப்பட்டுச் சென்று, எதிரிகளை முறியடித்து, லோத்துவையும், அவன் பொருட்களையும் மீட்டு வந்தான். (ஆதி 14:9-16) ஆபிரகாம் தன் இனத்தானுக்கு வந்த துன்பத்தை கேள்விப்பட்ட வேகத்தில், அவன் உள்ளமும், சரீரமும் சேர்ந்து உதவி செய்தது. ஆம் 'இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்' (நீதி 17:17) கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றுள்ள சகோதர, சகோதரிகளுக்கு உதவி செய்வதில் நம் உள்ளம் துடிக்க வேண்டாமா? அது நம் கடமையல்லவா? கடமையைச் செய்வோம். ஆண்டவரிடம் பலன் பெறுவோம். உதவி செய்வது என்பது என்ன? என்று வேத வசனத்தின் அடிப்படையில் உணர்ந்து கொண்டோம் தொடர்ந்து உதவி செய்யமாலிருப்பது என்பது என்ன என்பதையும் அறிந்து கொள்வோம்.

(தொடரும்) K.M. பிலிப். சிறுவலூர்

# நான் ஏன் பிறந்தேன்

மனித வாழ்க்கை பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. மானிடராய் பிறப்பது அரிது! மனிதனாய் பிறந்திருக்கவே கூடாது! வாழ்க்கை வாழ்வதற்கே! வெந்ததை தின்போம், விதிவந்தால் சாவோம்! நரகமாவது,மோட்சமாவது இருக்கும்வரை அனுபவிப்போம்!

இவையெல்லாம் வாழ்க்கை பற்றி நாம் கேள்விப்படும் சில மதிப்பீடுகள். இவைகளிலிருந்து மக்களுக்கு வாழ்க்கை பற்றிய ஒரு தெளிவான கருத்து இல்லை என்பது தெளிவாகிறது. வாழ்க்கை என்பது என்ன என்பதை புரிந்து, அதை முறையாக துவங்கும் முன்னரே பலருக்கு அது முடிந்துவிடுகிறது. சிலர் தத்துவார்த்தமாக நான் ஏன் பிறந்தேன்? நான் எங்கிருந்து வந்தேன்? ஏன் வாழ்கிறேன்? எவ்வளவு காலம் வாழப்போகிறேன்? மரணம் நிச்சயம்! அதன் பின் என்ன நிகழும் என பல வினாக்களை தொடுத்தாலும் அவைகளுக்கு சரியான பதில் தெரியாமல் தவிக்கின்றனர்.

மானிட வாழ்க்கையின் துவக்கம், நோக்கம், பிரச்சினை, தீர்வு மற்றும் மறுமை பற்றிய உண்மையை யார்தான் சரியாகச் சொல்ல முடியும்? உலகத்தையும் மனிதனையும் படைத்த மெய்தேவன் தான் இது பற்றிய உண்மையை சரியாகக் கூறமுடியும். எவரும் தற்செயலாகவோ அல்லது விதிவசத்தாலோ பிறந்து, வாழ்ந்து, சாவதில்லை. மனிதன் விலங்குகளை விட எவ்வளவு மேலானவனோ அவ்வளவு மேலான நோக்கம் அவன் வாழ்க்கைக்கு இருக்கிறது.

## மனித வாழ்க்கையின் துவக்கம்

தேவன் உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்தார். ஒரு கட்டிடம் பொறியாளரையும், ஒரு ஓவியம் ஓவியரையும் புலப்படுத்துகிறது. அதுபோல தேவனுடைய ஆச்சரியமான படைப்புக்கள் அவர் இருப்பதையும் அவருடைய ஆற்றலையும் உணர்த்துகின்றன. (ரோ. 1:18-20)

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங். 19:1) தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான். அவர்கள் தங்களை கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள். (சங். 14:1)

அவர், முதல் மனிதனாகிய ஆதாமையும் ஏவாளையும் தமது சாயலாக பூரணராக படைத்தார் (ஆதி 2:7, 1:27) நான் பிரமிக்கத்தக்க

அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புத்தகத்தில் எழுதியிருந்தது என தாவீது தான் தேவனால் படைக்கப்பட்ட விதத்தை கூறுகிறார். (சங் 139:14-16) நாமெல்லாரும் கடவுளின் திட்டப்படி இவ்வுலகில் படைக்கப் பட்டுள்ளோம்.

## வாழ்க்கையின் நோக்கம்

கடவுள் நமது வாழ்க்கைக்கு சிறந்த நோக்கத்தை வைத்திருக்கிறார். நாம் அவரை தேடி அவருடைய திருவுளப்படி வாழ்வதே அந்த நோக்கம். (மீகா 6:8, அப் 17:26-27)"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவை படைத்தான் தன்னை வணங்க"என்பது முன்னோர் வாக்கு. மெய் தேவனை அறியாமலிருப்பது மனிதனை விலங்குகளுக்கு ஒப்பாக்கிவிடுகிறது. அவரைப்பற்றி அறிந்திருப்பதே மெய்யறிவு (சங் 49:20, நீதி 9:10).

பணம் சேர்ப்பது, பொருள் சேர்ப்பது, உலகை ஆதாயப்படுத்துவது மற்றும் சரீர இச்சைகளின்படி வாழ்வது வாழ்க்கையின் நோக்கமன்று.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தி அடைவதில்லை. செல்வப் பிரியன் செல்வத்தினால் திருப்தி அடைவதில்லை (பிரா 5:10) பண ஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது (1 தீமோ 6:10)

ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல (லூக் 12:15) உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம் (1 தீமோ 6:7) ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்றார் இயேசு கிறிஸ்து (மத் 16:26) உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போகும்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1யோவா 1:17)

அப்படியானால் வாழ்க்கையின் நோக்கம் தான் என்ன? "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; பின்பு இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்" என்றார் இயேசு கிறிஸ்து (மத் 6:33) தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். இதுவே எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு

காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (பிர 12 : 13-14)

## பாவம் - வாழ்வின் பெரும் பிரச்சனை

வறுமை, வேலையின்மை, ஏற்றத்தாழ்வுகள் போன்ற சமூக பொருளாதார பிரச்சனைகள் தீர்வுக்குரியவைகள்.

மனிதனின் ஆன்மீக பாவமும் மெய் தேவனை பற்றிய அறியாமையும் அவனால் தீர்க்க முடியாத பெரும் பிரச்சனையாக இருக்கிறது. தேவன் உலகத்தையும் மனிதனையும் படைத்தார். மனிதன் அவரை உருவாக்கி அமைக்க முடியாது. மனிதன் கட்டிடம் கட்டுவதை பார்த்திருக்கிறோம். கட்டிடம் மனிதனை உருவாக்குவதை நாம் பார்த்ததில்லை.

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம் என்றார் மெய்தேவன் (யாத் 20:3-5)

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள் (ரோ 1:23-25) இம்முயற்சியில் தோன்றிய சமயங்கள் சமூகத்தில் ஏற்ற தாழ்வுகளை உருவாக்கி, தீண்டாமை, சதி, பாலிய விவாகம், பெண் சிசுகொலை, மிருகபலிகள் போன்ற சமூகக் கேடுகளை பேணி வருவதாக கருதப்படுகிறது.

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராய் இருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகி றதில்லை. நாம் தேவனுடைய படைப்புகளாயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது (அப் 17:24, 29)

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்துவிட்டனர் என வேதம் கூறுகிறது (ரோ. 3:23) தேவனுடைய கற்பனைகளை மீறி நாம் யாவரும் பாவம் செய்துள்ளோம். (1 யோவா 3:4) பாவத்தின் சம்பளம் நரகாக்கினை (ரோ 5:16, 6:23) பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் • (யோவா 8:34) பாவம் மனிதனை வஞ்சிக்கிறது, தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது (ரோ. 7:11, ஏசா. 59:1-2).

ஐயோ! என்னால் திருந்த முடியவில்லையே! ஐயோ! நான் பாவ பழக்கங்களை விட்டுவிட போராடியும் என்னால் விடமுடியவில்லையே என ஏங்கி தவிப்பவர் ஏராளம். அரசு சட்டம் மனிதனை பாவத்திலிருந்து விடுவிக்க முடியவில்லை. பூரண மதுவிலக்க கொள்கை இதுவரை வெற்றி பெறவில்லை. சமய சன்மார்க் ஈடுபாடும் அதற்கு நிவாரணமல்ல. 40 நாள் சமய ஈடுபாட்டின் பின் மீண்டும் தவறுகள் தொடருகின்றன. மருத்துவமும் உளவியல் சிகிச்சையும் பாவப் பிரச்சனையை தீர்க்க முடியவில்லை. சுயக்கட்டுப்பாடும் கைக்கொடுக்கவில்லை. பாவம் அவ்வளவு பயங்கரமானது! மனிதன் தன்னை சீர்திருத்தவும் பாவத்திலிருந்து விடுவிக்கவும் முடியாமல் தவிக்கிறான்.

மனிதன் நினைக்கிறபடி பாவம் அவனுக்கு திருப்தியை அல்லது சாதனை உணர்வை கொடுப்பதில்லை. மாறாக அதின் இழிநிலையைப் பாருங்கள்!

| | | |
|---|---|---|
| சினிமா பழக்கம் | : | சினிமா பாணி குற்றங்களையும் ஒழுக்கக் கேட்டையும் சமுதாயத்தில் வளர்ந்துள்ளன. |
| மது பழக்கம் | : | துயரம், வறுமை, அவமானம், நோய் மற்றும் அகால மரணத்தை கொண்டு வருகிறது. |
| பாலியல் பாவம் | : | வாழ்க்கையை நரகமாக்கி குடும்பங்களை சிதறடிக்கிறது. இந்தியாவில் சுமார் 10 லட்சம் பேரை "எய்ட்ஸ்" தொற்றும் அபாயம் உள்ளதாக சுகாதார துறை புள்ளி விபரங்கள் கூறுகின்றன. |
| புகை பழக்கம் | : | நுரையீரல் நோயை உண்டாக்கி இந்தியாவில் வருடத்திற்கு சுமார் ஆறு இலட்சம் பேரை கொல்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. |
| போதை பொருட்கள் | : | இப்பழக்கத்தால் இளைஞர்களின் வாழ்வு அழிந்து வருகிறது. |
| சூதாட்டம் | : | வறுமையையும் இழிவையும் ஏற்படுத்துகிறது. |

பாவத்தின் விளைவாக வரும் குற்ற உணர்வு, பயம், மரணம், வேதனை, தேவ தண்டனை பற்றி சொல்லவே வேண்டாம்.

## தீர்வு

தேவன் பாவிகளாகிய நம்மை நேசிக்கிறார். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ 1:15) அவர் நமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவர் பிதாவின் வலது பாரிசத்தில் கர்த்தராக உயர்த்தப்பட்டுள்ளார் (1 கொரி 15:3-4, 1 பேது. 3:22)

இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப் 4:12)

தேவன் தமது கிருபையால் இலவசமாக மீட்பையும் சமாதானத்தையும் கொடுக்கிறார். இதற்கு தேவை மனமாற்றம் தான் மத மாற்றம் அல்ல.

தேவன் ஒருவர் உண்டென்றும், இயேசு தேவனுடைய குமாரனென்றும் விசுவாசியுங்கள் (எபி 11:6, யோவா. 20:30), பாவங்களுக்காக மனந்திரும்புகள் (லூக். 13:13, அப் 2:88, 17:30). இயேசுவை தேவ குமாரனென்று அறிக்கையிட்டு (ரோ. 10:9-10 அப் 8:37). பாவ மன்னிப்பிற்காக திரு முழுக்கு பெற்று இரட்சிக்கப்படுங்கள். (மாற். 16:15-16). கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துக் கொண்டு தூய ஆவியின் வரத்தை கொடுக்கிறார் (மத். 16:18, அப் 2:47, ரோ. 16:16).

## முடிவு

அன்றியும் ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி - 2:97). தேவனை அறியாதவர்களுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும் படிக்கு கர்த்தராகிய இயேசு மீண்டும் வர இருக்கிறார். அப்போது அவருடையவர்கள் மகிமையும் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையடைவார்கள் (2 தெச. 1:7-10). கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போகும். பூதங்கள் வெந்து உருகிப்போகும், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோகும் (2 பேது. 3:10).

அருமை நண்பரே, நீங்கள் ஒருவேளை தெளிவான நோக்கமின்றி வாழ்ந்துகொண்டிருக்கலாம்! உங்கள் வாழ்க்கை பயணம் திசைமாறி போயிருக்கலாம்! எதிர்காலம் இருள் மயமாக தோன்றலாம்! அனைத்தும் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டிருக்கலாம்! ஓயாத போராட்டம், நித்தமும் கண்ணீர், தீராய வியாதி உங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கலாம்! முதுமையும் தனிமையும் உங்களை வருத்திக் கொண்டிருக்கலாம்!

நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. நமது வாழ்வு நிலையற்றது. இன்றே இப்பொழுதே ஆண்டவர் இயேசுவுக்கு கீழ்ப்படிந்து பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றுங்கள். பிறவிப்பயனை அடையுங்கள். இதைச் செய்யாவிட்டால் உங்கள் வாழ்க்கைக்கு எந்த நோக்கமும் நம்பிக்கையும் இல்லை. இப்படிச் செய்ய தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. நாங்கள் உங்களை மதித்து நேசிக்கிறோம். இயேசுவில் பிறவி பயனை அடையுங்கள். இதற்காக அவர் உங்களை வருந்தி அழைக்கிறார். மேலும் விபரம் அறிய அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை அணுகுங்கள்.

ப. பால்ராஜ்
திருச்சி

# ஒரு தாலந்து மூலமாக அநேக கனி கொடுத்தல்

நான் உதவி செய்து அதில் ஈடுபட வேண்டும் என்று உண்மையிலேயே விரும்புகிறேன். ஆனால் ஊழியத்தில் எனக்கு அப்படிப்பட்ட தாலந்து கொடுக்கப்படவில்லையே. இப்படிப்பட்ட கருத்தை நம்முடைய சகோதரர்கள் மத்தியில் நான் அடிக்கடி கேட்டு ஆச்சரியப்படுகிறேன். இந்த சகோதரர்கள் தேவனுக்கு பல வேலைகளில் ஊழியம் செய்வதற்காக தாங்கள் தகுதியற்றவர்கள் என்று எண்ணிக் கொள்கிறார்கள். பொதுவாக கிறிஸ்தவர்கள் தங்களை ஒரு தாலந்து பெற்ற மனிதனாகவே நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் பத்து தாலந்தைப் பெற்ற மனிதனாக நினைத்துக் கொள்வதில்லை (மத் 25:14-30). அனேகர், எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று எண்ணுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவோடு தொடர்பு கொள்ள விரும்புகின்ற ஒரு கிறிஸ்தவன் அனேக கனி கொடுக்க வேண்டும். (யோவன் 15: 1-6). தேவனுக்கு, தாங்கள் அனேக கனி கொடுக்கக்கூடிய திறமை தங்களுக்கு இருக்கின்றது என்று அனேகர் தொரிந்துகொள்வதில்லை. இப்போது தேவனுக்காக கனி கொடுக்கக்கூடிய சில வழிகளைப் பார்ப்போம். ஆத்துமா ஆதாயப் பணி கொண்டுள்ளவராகவும் (ரோமர் 1:13), ஆவிக்குரிய கனியை வெளிப்படுத்துதலின் மூலமாகவும் (கலாத் 5:12), நம்மை கிறிஸ்தவ கிருபையினாலே அலங்கரித்துக் கொள்வதின் மூலமாகவும் (11 பேதுரு 1:5-8), பரிசுத்தமாக இருப்பதன் மூலமாகவும் (எபி 13:15), அறிவிலும் ஞானத்திலும் வளருவதின் மூலமாகவும் (கொலோ 1:10; யாக் 3:17), நம்முடைய பணத்தை மற்றவர்களுக்கு பங்கிட்டு கொள்வதின் மூலமாகவும் (பிலிப் 4:13-17) இருக்கலாம்.

நாம் எல்லோரும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு முக்கியமான தாலந்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். ஊழியத்தில் அதிக கனி கொடுக்கக்கூடிய வழியை ஏற்படுத்தும் உற்சாகம் தான் இந்த தாலந்து.

ஒருவருக்கு பிரசங்கியாராக இருக்க தாலந்து இல்லாவிட்டாலும், உற்சாகத்தின் மூலம் தன்னுடைய பிரசங்கத்தில் கனி கொடுக்க முடியும். வேத வகுப்பு ஆசிரியராக இருக்கக்கூடிய தகுதி ஒருவருக்கு இல்லாவிட்டாலும் கூட, உற்சாகத்தின் மூலம் அந்த வேலையை செய்யமுடியும்.

இப்படிப்பட்ட காரியங்களில் ஒருவர் கனி கொடுக்க உற்சாகம் தேவைப்படுகிறது என்கின்ற கருத்தை சிலர் சந்தேகிக்ககூடும். ஆனால்

இந்த சந்தேகங்கள் தீர்த்துக் கொள்வதற்காக நாம் யாத்திராகமம் 17:8-13 வசனங்களைப் படிக்கவேண்டும். அமெலேக்கிய ரோடு போர் புரிய இஸ்ரவேலர்கள் தயாராக இருந்தார்கள். அந்த சண்டை காட்சியைப் பார்ப்பதற்காக மோசே மலை உச்சியில் நின்று கொண்டிருந்தார். இரண்டு நாடுகளும் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, தேவனுடைய கோலைப் பிடித்துக்கொண்டு மோசே தன்னுடைய கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தினார். மோசே இப்படி செய்யும்போது இஸ்ரவேலர்கள் போரில் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார்கள். மோசே தன்னுடைய கரங்களை கீழே தளர்த்தும்போது அமலேக்கியர்கள் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார்கள். தன்னுடைய கரங்களை மேல்நோக்கி உயர்த்திக் கொண்டிருந்ததால் அவை சோர்விழந்து காணப்பட்டன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆரோனும் ஊரும் மோசேயின் இருபக்கத்தில் நின்று கொண்டிருந்து, மாலை வேளை வரை அவருடைய கரங்களைத் தாங்கி கொண்டிருந்தார்கள். இதனால் இஸ்ரவேலர்கள் வெற்றியடைந்தார்கள்.

அன்றைய நேரத்தில் இஸ்ரவேலரின் படைத்தளபதியாக யோசுவா இருந்தார். மேலும் தேவனுடைய கோலை பிடித்துக்கொள்ள மோசே இருந்தார். மோசேயை உற்சாகப்படுத்த ஆரோனும் ஊரும் தங்கள் வேலையை செய்து கொண்டிருந்தார்கள். அன்றைய நாளிலே இஸ்ரவேலரின் வெற்றிக்கு ஆரோனும் ஊரும் முக்கிய வேலையில் ஈடுபட்டார்கள் என்பதை யார் மறுக்க முடியும்? அவர்கள் தேவனுடைய மக்களின் வழி நடத்துனர்கள் அல்ல. அவர்கள் அன்றையப் போரில் வீரர்கள் அல்ல. அமலேக்கியர்கள் மேல் இஸ்ரவேலர்கள் வெற்றி செலுத்த அவர்கள் சாதாரண உதவிக்காரர்களாக இருந்தார்கள்.

நாம் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்து என்னவென்றால் உற்சாகம் என்கின்ற தாலந்தின் மூலமாக, நாம் அனேக கனிகளை கொடுக்க முடியும். ஒருவர் பிரசங்கியாராகவோ, மூப்பராகவோ, வேதவகுப்பு ஆசிரியராகவோ, பாடல் நடத்துபவராகவோ இருக்கக்கூடிய தாலந்து இல்லாவிட்டாலும் கூட, அந்த வேலைகளை செய்யக்கூடிய மக்களுக்கு உற்சாகம் அளித்து உதவி செய்வதின் மூலமாக அனேக கனிகளைக் கொடுக்க முடியும்.

இந்த சத்தியத்தை மனதில் கொண்டு நாம் எல்லோரும் உற்சாகம் அடைந்து "சமாதானத்திற்கு அடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19).

- தெரிந்தெடுக்கப்பட்டது.

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**

The voice of Truth-Speaker: J.C. Choate,
The Voice of Truth, Post Box 3815, New Delhi-110 049
Fridays - 7:45 to 8:00 P.M.

**HINDI**

Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susamachar, Post Box 3815, New Delhi-110 004
Tuesdays - 9:00 to 9:15 P.M.
Fridays - 9:00 to 9:15

**TELUGU**

The Voice of Truth-Speaker; Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinda 533 001

Tuesdays - 2:00 to 2:15 P.M.
Thursdays - 2:15 to 2:30 P.M.
Fridays- 2:15 to 2:30 P.M.

**TAMIL**

The Way of Truth-Speaker: P.R. Swamy.
The Way of Truth, Post Box 8405, Bangalore 560 084
Sundays - 6:45 to 7:00 P.M.
Thursdays - 6:45 to 7:00 P.M.

**MALAYALAM**

The Voice of Truth-Speaker: P.K. Varghese
Church of Christ, Sunny Meads Lane, Trivandrum-34 (Kerala)
Fridays - 3:15 to 3:30 P.M.

**KANNADA**

The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box 448, Bangalore 560 004
Sundays - 1:45 to 2:00

**ALL ARE ENCOURAGED TO LISTEN**

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the address listed. Also the radio sermons are available in book form.

JAN-94, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49
Licenced to Post wtihout Prepayment of Postage......

அழைக்கின்றோம்! அன்பு கூறுகிறோம்! ஆனந்திப்போம்!

**12வது வருடாந்திர தேசிய கருத்தரங்கம்**

**1994, பிப்ரவரி 13, 14 மற்றும் 15 தேதிகளில்,**
ஞாயிறு மாலை 4 மணிக்கு கருத்தரங்கம் துவங்குகின்றது.

இடம்:
கிறிஸ்துவின் சபை, 13, சாய் நகர், சென்னை 600 082
தொலைப் பேசி : 044- 5370882

பொருள் :

**கிறிஸ்துவுக்குள் சந்தோஷம்**

பேச்சாளர்கள்
இந்தியா மற்றும் அயல் நாடுகளிலிருந்து வருகை தருகின்றார்கள்.
உங்களுடைய வருகைக்கான பதிவு மற்றும் விபரங்களுக்கு தொடர்பு.
கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்,
சகோ. பீட்டர் சாலமோன்

வாருங்கள்! சேருங்கள்! பலப்படுங்கள்!

PRINTED MATTER BOOK POST

To

If undelivered Please return to
The Editor
**THIRUMARAI AASAAN**
POST BOX No. 27, KANGAYAM - 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode.
Editor E.Z.S. Rajanayagam